1038

உ

கணபதி துணை

சீர்காழி தாலூகா

விபரீத வெள்ளத்தின் பரிதாபச் சிந்து.

இவை

தஞ்சை வித்துவான் சுப்பிரமணியபிள்ளை அவர்கள்

சிஷன்

நா. லே. இராமசாமிபிள்ளை இயற்றியதை

ஷெயூர் கரந்தை மகா-ள-ள-ஸ்ரீ

கருப்பய்யாப்பிள்ளை அவர்களால் பார்வையிடப்பட்டு

சீகாழி

'...பிரஸில்' பதிப்பிக்கப்பட்டது.

...ண்டாம் பதிப்பு.

1924 [காப்பிகள் 1000.

O=,1MRP,5
1N24
18107

உ

சிவமயம்

சீர்காழி தாலூகா விபரீத வெள்ளத்தின்

பரிதாபச்சிந்து.

வெண்பா.

சீர்மேவும் சீர்காழிதாலுக்காவில் சென்ற
கார்கொண்டவெள்ளத்தின் கதையையானும்—தாரணிலே
சிந்தாகப்பாடி சிறுவன் விளம்புதற்கு
கந்தனுக்கு முத்தோன் காப்பு

இராகம் நாதனுமக்கிரிகை தாளம்—ஆதி.

பரிதாப மைய்யா மிகப்பெருகிய
வெள்ளத்தில் உருகினர் மெய்யா
பரிதாபமென்றுலோ பார்க்க சகியாது
பாருள் ஜனங்கள்பட்ட பாட்டைபார்க்க இது (1)
பரிதாபமைய்யா

ஆயிரத்தொளாயிரத்திருபத்திஞலிலே
அருகிவீர் ஜூலை பதினோத்துக்கு[illegible]லே
ஓயாமல் வெள்ளம் இருபது நாள்மட்டும்
ஓடியே வந்தது யுகப்பிரளய முற்[illegible]
கேயரே கேளும்
சேர்ந்த ஆபத்தை உரைக்கிறேன் நாளும் (2)

கொச்சி குடகிலே மழை அதிகத்தாலே
கோடிவெள்ளப் பிரவாகப் பெருக்காலே
மெச்சும் பவானிஎன்ற ஊரே பாளாச்சு
மிக்க கோயம்புத்தூர் சேலம் திருச்சியெல்லாம்
வெள்ளத்தால் நாசம்
எந்த காலத்திலும் இல்லாத மோசம் (3)

ஆழியைப்போல் சீர்காழி முழுதிலும்
அடங்காமல் பெருகிய அடுத்த ஊரேகியும்
சூழ்ந்து மாயவரமட்டும் பெரிகியும்
சொல்ல முடியாத கிராமங்கள் முழுகியும்
பாளாச்சஊரு
சிலரைபோட்டுக்கொண்டு எரிகண்டார்கள்நேரு (4)

கொள்ளிடம் தொள்ளாமல் விள்ளவும் அயலூரு
கூரும் வடரெங்கம் எல்லாம் உடைந்ததாம்
பள்ளம் ஒருமயில் தூரத்துக்கிருந்ததாம்
பார்க்க அணைக்கரை பாளாய்முடிந்ததாம்
பொல்லாதகாலம்
இப்படி வருமென்று அறிவாரோகேளும் (5)

வந்தவெள்ளமது வடிந்து போகுமென்று
வண்டி மாடு ஆடு ஐஸ்வர்யத்தைக்கொண்டு
எந்த ஊர் செல்வோம் எதுந்தெரியாதென்று
சிந்தைகலங்கியே நொந்து இருக்கையில்
அனியாயவெள்ளம்
அய்யா நீச்சக்குமேலாச்சு விபரீதப்பள்ளம் (6)

மனையாளோடு மக்கள் யாவரும் கைவிட்டு
மாடு ஆடு வண்டி அடங்கலுமே கெட்டு
தனியாய் வரமுடியாமலேயே பட்டு
தாவி மோட்டுவளை மீதிலேறிக்கொண்டு
இனிஎன்ன செய்வோம்
என்று யேங்கி ஓங்கினர்கள் இதுவென்னபாவம் (7)

இந்த விதமாக இப்படி இருக்கையில்
ஏகமாய் ரயில்செல்லும் பாதையில் ஒருமையில்
தந்தி மறத்தோடு தானே அடித்துச்செல்ல
தந்தி தபாலெல்லாம் தங்கினது சொல்ல
வண்டியே இல்லை
வந்து வந்து பார்த்தும் வகையேதும்இல்லை (8)

கல்லுமலைகளை கொண்டுவந்து போட்டு
கனத்தமணலை கயற்றுச் சாக்கிவிட்டு
பொல்லாத உடப்பிலேபோட்டார் ஈறுயிரம்
போனவழிதெரியாமல் போச்சுதாம் அன்னேரம்
வெள்ளத்தின்வேகம்
யார்சொல்லமுடியுமோ இன்னுமனேகம் (9)

இருப்பு தண்டவாளத்தை எத்தனையோ போட்டார்
தண்ணீர் யெட்டி தள்ளியே காட்டார்போல
பெருகவே பெறளயம் பெறமாதமாக பிறண்டகதை
மறங்களைச் சாய்த்து புறட்டியது
வெள்ளசறங்கோர்த்து (10)

வீப்பு இஞ்சினீரும் சிராய் அஸிஸ்டண்டர்
ஸ்டாபிக் மானேஜர் மெக்காணிக்கல் சொல்லும்
கோப்புடன் ரயில்வே போலீஸர் மாஸ்டேட்டு
கூட்டமாய் பெருகிய போட்டிலே வரிபார்த்து
தப்பாது ஊரு
நாமும் தங்கினல் மோசம் வருகுமே பேரு (11)

ஊருஜனங்களை ஓடிப்போங்களென்று
உரைத்துமே இவர்களும் ஒருமிக்கபோய்விட்டார்
பாருங்கள் பின்னலே ஜில்லாகலெக்டர்
பார்க்கவேணுமென்று பதரி ஓடிவந்தார்
ஊருக்குள்ச் சென்று
உத்தியோகம்செய்யும் பேர்களை அன்று (12)

சென்று தாலுக்கா செஜனு பார்வை இட்டு
ஜெயிலில் இருந்த கைதியையும் விட்டு
கன்றிழுந்த பசுபோல ஜனங்கள் கதருவதைக் கண்டு
கலங்காதிர்கள் என்று
நின்றெல்லாம் சொல்லி
நேருய் போட்டேறினர் யெல்லோரும் தள்ளி (13)

சியாழிதாலுக்கா டவுனும் தென்பாதியில்
சேதமான வீடு எத்தினையோ உண்டாம்
பார்த்து போலீசார்கள் பக்குவமாகவே
பரிந்து ஜனங்களை நீந்து கரையில் சேர்த்தார்
இல்லாத போனல்
ஆயிரம் கணக்காக மாளுமே ஆனல் (14)

மட்டுக்கடங்கா ஜலம் எட்டியே பார்த்தது
    சட்டனுபுரத்தையும் முட்டியே தோர்த்தது
கட்டிய வீடெல்லாம் நெட்டியே பேர்த்தது
    கலங்கிபோட்டேரி ஜனம் காழியைச்சேர்ந்தது
        தவித்தார்கள் நின்று
    தாயைப் பிள்ளைவிட்டு தயங்கினான்று (15)

ஓடத்திலேயேறி வந்தஜனங்கள் கூடி
    ஓவென்று அலறினார் பசியதனால் வாடி
ஒப்பாக திருநாராயணபிள்ளையும் நாடி [தினம்
    உலுப்பையோடு அன்னம் செழிப்பாய் அளித்தார்
        உலகினில்லேது
    புண்ணியவானுக்கிணை ஒருவரும் கிடையாது (16)

பொல்லாதவெள்ளமும் செய்திடவேத்தொல்லை
    புஸ்தகந்தனிலே எழுதவிட மில்லை
இஷ்டரே அகவிலை யேறினதினாலே
    எழைகளெல்லாம் துடித்தார் பூமிமேலே
        எங்கியே வாடி
    ஈசன் செயலோவென்று அழுதார்கள்கூடி (17)

தோணியப்பர் கிருபை செய்திட்டதினாலே
    துஷ்டவெள்ளமது வடிந்திட்டதப்பாலே
இஷ்டமுடன் சிறுவன் எழுதின தமிழிலே
    யேதேனும் குற்றமிருந்தாலும் பொருப்பீர்களே
        இரு காம் குவித்து
    இராமன் பணிந்தேனே சிரமதை சாய்த்து (18)

பம்பாய் சேட்டின் பேரில்

(இந்திரலோகச் சந்திரகை மண்டபமே
என்ற தர்பார் மெட்டு).

இராமசரம் போக வென்றோர் சேட்டு
வந்து சீர்காழியில் வெள்ளம் வரக் கேட்டு
சிந்தை வாடியே தயங்கினார் மனம் நாட்டு
ஜனம் போட்டு ஏரி மீட்டு
வந்த சங்கடத்தைப் பார்த்து கோடி போட்டு (1)

சாதம்மலைபோல் வடித்துக் கொட்டி
அதற்கேற்ற சாம்பார்களும்வைத்தார் கிட்டி
ஜனம் வாங்கியே உண்டு களித்தார் சட்டி
சட்டி சட்டியாய் வாங்கிச்சென்றார்கள் யெட்டி
சிங்கக்குட்டி தங்கக்கட்டி
தருமம் தழைக்கும் மரத்தைக் கொண்டார் வெட்டி (2)

இப்படியாய் சேட்டுனாலே ஏழை
துயர் நீங்கவே தருமம் செய்த தாலே
இந்த புகழ் லளியாதுலகம் கேள்ள
இனிமேலே யென் னாவாலே
யெடுத்துரைத்தேன் இராமஸாமி யின்னாளே. (3)

முற்றிற்று.

முக்கிய அறிவிப்பு.

இப்புத்தகம் வேண்டுவோர் சீர்காழி தாலுக்கா டவுன் செட்டித்தெரு சி. கு. முனிசாமிசெட்டியாரிடம் பெற்றுக் கொள்ளலாம். இன்னும் கருணைக்கடாக்ஷ கீர்த்தனை முதல் பாகமும் இரண்டாம் பாகமும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு,
சி. கு. முனிசாமிசெட்டியார்.